(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 22 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, செத்தெம்பர் 12, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0048/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோட்டல் டிவெலெப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டெட்டின் ஹில்ரன் ஹோட்டல் அமைந்துள்ள 7 ஏக்கர் நிலம், 1999, யூலை மாதம் விசேட மானியங்கள் இல 673 மற்றும் 674 என்பவற்றின் ஒப்படைப்பின் பிரகாரம் அரச உறுதியுரிமையில் உள்ளது என்பதையும்,

(ii) இந்நிலம் மீள அரச உறுதியுரிமைப்படுத்தப்பட்டது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1999, யூலை மாதம் தொடக்கம் எச்.டி.எல் இனால் இந்நிலத்தைப் பயன் படுத்தியமைக்காகச் செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வாறு செலுத்தப்படவில்லையானால், அதேவிதமான சலுகை ஏனையோருக்கும் வழங்கப்படுமா என்பதையும்,

(iii) எச்.டி.எல் வங்குறோத்து அடைந்திருப்பதால், அதை முடிவுறுத்துவதற்கு விண்ணப்பமொன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும்,

(iv) 2007, மே 03 ஆம் திகதிக்குப் பின்னர் எச்.டி.எல் இனை மூடிவிடுவதற்கு அமைச்சரவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறாயின், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கமைய, அரச கடன்களின் மீதான குறையும் இடைவெளித் தொகையை அரசிற்குச் செலுத்துதற்கான தனிப்பட்ட பொறுப்பை அமைச்சரவை ஏற்குமா என்பதையும்,

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0051/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2001 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரசாங்கத்தினால் பெறப்பட்ட மொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) வட்டி வீதத்தையும் மீளச்செலுத்தல் காலத்தையும்,

(iii) இந்தக் கடன்கள் பெறப்பட்டமைக்கான காரணத்தையும்,

(iv) இன்றுள்ளவாறு நாட்டின் மொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களையும்,

(v) இக்கடன்கள் மீண்டும் செலுத்தப்பட வேண்டிய திகதியையும்,

(vi) செலுத்த வேண்டிய மொத்த வட்டியை அவற்றைச் செலுத்த வேண்டிய திகதிகளுடனும்,

(vii) 2001 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை வட்டிச்செலவினத்தை வருடாந்த அடிப்படையிலும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே உள்ளவாறு செலுத்தித் தீர்க்கப்பட்ட கடன்கள் (மூலதனம் மற்றும் வட்டி),

(ii) ஆண்டொன்றுக்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை

என்பன பற்றிய அனைத்து தரவுகளையும் அடங்கிய அட்டவணையொன்றினை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) இந்தக் கடன்தீர்த்தல் எந்த வருவாய்களிலிருந்து செலுத்தப்படும் என்பதை அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0062/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவராது, தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு திறைசேரியின் செயலாளருக்கு அனுமதி வழங்கும் 6 ஆவது வாசகமொன்றை 2005, 2006 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அறிமுகப்படுத்தியதென்பதையும்,

(ii) இது பொது நிதி மீதான பாராளுமன்றத்தின் மேலாண்மையை கபடமான முறையில் கவர்ந்து கொள்வதோடு அதனை சிதைவடையவும் செய்கிறதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இவ்வுறுப்புரிமையைப் பயன்படுத்தி 2006, 2007 ஆம் ஆண்டுகளில் திறைசேரியின் செயலாளரினால் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) எந்நோக்கத்தின் நிமித்தம் அவை பயன்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அவற்றின் தலைப்பு இலக்கம் மற்றும் திட்டவட்டமான கருத்திட்ட குறியீடு ஆகியவற்றை அவற்றிற்கான விளக்கங்களுடன்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0156 / '08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, வீடமைப்பு அபிவிருத்திக்கான உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் என்ற வகையில் 198 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதற்கிணங்க 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அப்பணத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றிய கருத்திட்டங்கள் யாவை,

(iii) பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0157/ '08

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, தெரிவு செய்யப்பட்ட 119 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒரு கிராமத்திற்கு 25 வீதம் வீடுகள் நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்காக 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட கிராமங்கள் யாவை,

(iii) பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0158/ '08

6.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் லுணாவ சுற்றாடல் மற்றும் சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக ரூபா 1,110,923,000 ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய பணிகளுக்கானது

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0356/ ' 08

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— தேசத்தைக் கட்டியெழுப்பல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிலிமதலாவ, மொலதண்ட, மெத்தேகொடே கெதர வத்த, இலக்கம் 96/2 என்னும் முகவரியில் வதியும் திரு. என்.வை. விமலதாச 1960 ஆம் ஆண்டிலிருந்து கண்டிய கிராமிய ஆணைக்குழுவில் தொழிலாளியாகப் பணியாற்றினாரென்பதையும்,

(ii) 1987 ஆம் ஆண்டில் ரோலர் சாரதியாக ஓய்வுபெறச் செய்விக்கப்பட்டார் என்பதையும்,

(iii) இவருக்கு 1977 ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு வரையான பத்தாண்டு காலத்திற்கு மாத்திரமே ஓய்வூதியம் உரித்தாகியுள்ள தென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவர் இந்நிறுவனத்தில் பணியாற்றிய 1960 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி சம்பந்தமாக ஓய்வூதியம் கணிக்கப் படாமைக்கான காரணம் யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 1960 ஆம் ஆண்டு முதல் 1987 ஆம் ஆண்டு வரையான இவரது இடையறாத சேவைக்காலத்தைக் கவனத்திற்கொண்டு இவரது முழுமையான ஓய்வூதியத்தை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0357/ ' 08

8.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மினிப்பே பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உடவெல குடியேற்ற உத்தியோகத்தர் பகுதியில் பரவன்தன ஒய உப தபால் அலுவலகம் அமைந்துள்ள அரச காணியின் ஒரு பகுதியில் அனுமதியின்றி தனிப்பட்ட ஒரு நபர் வேலியமைத்து அனுபவித்து வருகின்றார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பரவந்தன ஒய ஐக்கிய நலன்புரி மரண சகாய சங்கக் கூட்டமொன்றை அமைப்பதற்கு நீண்ட கால வரி உரிமமொன்றினால் இக்காணியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும்,

(ii) இவ்விடத்திற்கு இவ்வனுமதியற்ற அனுபவிப்பு தடையாகவுள்ளது என்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இக்காணியை, அனுமதியின்றி அனுபவிப்பவரை அகற்றி பரவந்தன ஒய ஐக்கிய நலன்புரி மரண சகாய சங்கத்திற்கு வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0358/ '08

9.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அப்புதளை தேர்தல் தொகுதியில் நிக்கபொத்த பெரகல, பஹல பிலெக்வுட் கமயைச் சேர்ந்த திரு. ஆரியரத்ன 'மிரிதிய' எனும் பெயரில் அலங்கார மீன்கள் மற்றும் மலர்கள் விநியோகிக்கும் உல்லாசப் பிரயாண நிலையமொன்றை நடாத்திச் சென்ற சுமார் 2.5 ஏக்கர் காணி ஹல்தும்முல்ல பிரதேச செயலாளரினால் சுவீகரிக்கப்பட்டு மீண்டும் வேறொருவருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அநீதியான முறையில் இக்காணியை சுவீகரித்து, அங்கிருந்த கட்டிடங்கள், அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் மலர் பயிர்ச்செய்கை என்பன அழிக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) உல்லாசப் பிரயாணத்துறையினூடாக வாழ்ந்த இவர் மிகவும் அநாதரவான நிலைக்கு ஆளாகியுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) இந்த உல்லாசப் பிரயாண நிலையத்தை மீண்டும் கொண்டு நடாத்த இவருக்கு இக்காணியை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0494/ '08

10.

கௌரவ விஜித ஹேரத்,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான எத்தனை வாகனங்கள் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டுள்ளன,

(ii) இவ்வாகனங்களின் ரகம், இலக்கம் மற்றும் விடுவிக்கப்பட்ட திகதி ஆகியவை யாவை,

(iii) எந்தெந்த நிறுவனங்களுக்கு அல்லது நபர்களுக்கு எவ்வடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளது,

(iv) இணைக்கப்பட்டிருப்பின் அவர்களின் பெயர் மற்றும் பதவி ஆகியவை யாவை,

(v) இவ்வாகனங்களை விடுவிப்பதற்கு உரிய அனுமதி பெறப்பட்டிருந்ததா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கப் பட்டுள்ளதா,

(ii) இக்கட்டிடங்களின் முகவரி மற்றும் அதற்கான வாடகை அல்லது குத்தகை அடிப்படை யாது,

(iii) வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அல்லது நபர்களின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0495/ '08

11.

கௌரவ விஜித ஹேரத்,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் உள்ள துணைக் கம்பனிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவ்வொவ்வொரு கம்பனியும் அமைக்கப்பட்டதன் நோக்கம் யாது,

(iii) அவ்வொவ்வொரு துணைக்கம்பனியின் பணிப்பாளர் சபையினதும் பணியாட்டொகுதியினதும் பெயர், பதவி, சம்பளம் மற்றும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அடிப்படை ஆகியவை யாவை,

(iv) அக்கம்பனிகளுக்கு இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் வழங்கப்பட்டுள்ள பல்வேறு வகையான நிதி வசதிகள், வாகனங்கள், இயந்திரங்கள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய வசதிகள் ஆகியவை யாவை

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கம்பனிகளிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறுகின்றதா,

(ii) அக்கம்பனிகள் வருடாந்த கணக்குகளை ஒழுங்காகப் பேணி சிறந்த நிதி ஒழுங்குகளைப் பேணுகின்றனவா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0496/ '08

12.

கௌரவ விஜித ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை கப்பல் இடவசதி ஒதுக்கீட்டு மத்திய பணியகத்தின் (மத்திய கேள்வுப் பணியகம்) கப்பற்றுறை அபிவிருத்தி நிதியத்துக்காக பல்வேறு கப்பல் முகவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய, ஆயினும் 2002 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை நிலுவையாகவுள்ள பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பணம் அறவிடப்பட வேண்டிய கப்பல் முகவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பணத்தொகை எவ்வளவென்பதை அவர் விபரமாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) கப்பற்றுறை அபிவிருததி நிதியத்திற்குச் சொந்தமான பணம் சென்ற ஆண்டுகளில் அரச அல்லது வேறு அமைப்புக்களுக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) ஆமெனில், அப்பணம் சம்பந்தப்பட்ட திகதிகளில் எந்த அடிப்படையின் கீழ் மாற்றப்பட்டது என்பதை அவ்வமைப்புக்களின் பெயர்களுக்கேற்ப அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0518/ '08

13.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை மின்சார சபை பாவனையாளர்களுக்கான சேவைகளை வழங்கும் போது தேவைப்படும் மின் மானிகளுக்கான பற்றாக்குறை நிலவுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மின்மானிகள் தொடர்பாக அவ்வாறான பற்றாக்குறை ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) மின் மானிகளுக்கான பற்றாக்குறை எந்த ஆண்டிலிருந்து ஏற்பட்டது என்பதையும்,

(iii) இதன் காரணமாக மின்சாரம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் பாவனையாளர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை நீக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதையும்,

(iv) இலங்கை மின்சார சபை எந்தெந்த நாடுகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து மின்மானிகளை இறக்குமதி செய்கின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளிலிருந்து நிறைவேற்றப்படும் மின்சாரத் திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் போது இந்த மின்மானி பற்றாக்குறைகளினால் குறிப்பிட்ட திட்டங்களை ஆரம்பித்து வைத்தல் தாமதமடைவதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இந்த தாமதங்களை தவிர்ப்பதற்கு அமைச்சு மட்டத்தில் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் என்ன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0731 / ' 08

14.

கௌரவ என். டீ. என். பி. ஜயசிங்க,— வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் ஹட்டன் நகரத்துக்கு அயலில் அமைந்துள்ள "தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம்" இந்த அமைச்சுக்குச் சொந்தமானதா,

(ii) அவ்வாறாயின் அது எவ்வாண்டில் அமைக்கப்பட்டது,

(iii) இதற்காக, செலவு செய்யப்பட்ட முழுத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நிலையத்தின் ஆரம்பம் தொடக்கம் இதுவரை தொழில் நுட்பப் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) தற்போது இந்நிறுவனம் மூடப்பட்டிருப்பதன் காரணம் யாது,

(iii) இதைத் திறப்பதற்கு இவ்வமைச்சினால் ஏதேனும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0732/ '08

15.

கௌரவ என். டீ. என். பி. ஜயசிங்க,— தேசத்தைக் கட்டியெழுப்பல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹங்குரன் கெத்த பிரதேச 10 சமுர்த்தி வங்கிகள் ஊடாக "தியதிலக்க அப்பரல்" என்ற பெயரில் ஆடைத்தொழிற்சாலைகளை ஆரம்பிக்க கடன் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) கடன் பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் வழங்கப்பட்ட கடன் தொகைகளையும்,

(iii) குறிப்பிட்ட ஆடைத் தொழிற்சாலைகளின் ஆரம்ப உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) அவர்களது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(v) நிர்மாணப் பணிகள் மற்றும் இயந்திர பொறித்தொகுதிகளுக்கு செலவிடப் பட்ட பணம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்கூறிய ஆடைத் தொழிற்சாலை பிற்காலத்தில் வேறு நபர்களுக்கு விற்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) அவ்வாறெனின், அது எத்தொகைக்கு விற்கப்பட்டது என்பதையும்,

(ii) விற்று கிடைத்த பணம் சமுர்த்தி வங்கிகளினால் பெறப்பட்ட கடனை தீர்க்க பயன்படுத்தப்பட்டதா என்பதையும்,

(iii) மேலும் செலுத்தப்பட உள்ள பணமும் குறிப்பிட்ட செலுத்தல்களும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்தல்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 06, 2007) "வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் தமது அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [ பா.3/ '05]

பா.1 / '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஆயுதங்களை பதிவு செய்தல்,— இலங்கையிலுள்ள அனைத்து ஆயுதங்களையும் பதிவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பதிவு செய்ததின் பின்னரும் யாரிடமாவது அதிகாரமற்ற ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த நபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 20 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.2 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வங்கி அலுவலக நேரத்தை நீடித்தல்,— நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக வங்கி அலுவலக நேரத்தினை 9.00 மணி முதல் 16.00 மணிவரை நீடிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.3 / '08

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுதல்,— மிக சுதந்திரமாகவே மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவது நாட்டின் ஒழுக்கவிழுமியங்களுக்கு பங்கமேற்படுத்தி வருவதால் கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலை யங்களையும் மூடிவிட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.4 / '08

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE ) அரசாங்கக் கணக்குக்குழு (PAC ) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE ) அரசாங்கக் கணக்குக்குழு (PAC ) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளைபயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.5 / '08

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.6 / '08

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.7 / '08

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.8 / '08

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற் படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறுமாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.9 / '08

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போதும் ஒத்திவைக்கும் போதும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.10 / '08

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.11 / '08

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப் படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயம்சாராத படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.12 / '08

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடக வியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.13/ '08

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாதாந்த சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.14 / '08

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.15 / '08

16.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.16 / '08

17.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.17 / '08

18.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.18 / '08

19.

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்று உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு ''விசேட வழக்குத் தொடுநர்'' எனப்படும் பதவியொன்று உருவாக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.19 / '08

20.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச் சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தனிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.20 / '08

21.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கேகாலை மாவட்டத்தில் நூதனசாலை யொன்றினை தாபித்தல்,— கேகாலை மாவட்டத்தில் உள்ள புராதன, கலாச்சார, தேசிய விழுமியங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தொல்பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையிலுமாக நூதனசாலையொன்று தாபித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.21 / '08

22.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய கொள்கை நிர்ணயம் தொடர்பில் தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.22 / '08

23.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலை செய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.23 / '08

24.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— புதிய கண்டுபிடிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப் பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற் காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.24 / '08

25.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளைமேற்கொள்ளும் உள்நாட்டு கைத் தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.25/ '08

26.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— நீதித்துறை, காவல்துறை மற்றும் சிறைச்சாலை ஆகியவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழுவொன்றினை நியமித்தல்,— சமூகத்தில் வியாபித்து வரும் குற்றச் செயல்களை குறைப்பதற்காகவும், குற்றவியல் சட்டங்களில் உள்ள குறைபாடுகளைக் குறைத்து அதனை மேம்படுத்தியும் காணித் தகராறுகள் உட்பட நீதிமன்றங்களில் குவிந்திருக்கும் விசாரணைகளின் தேக்க நிலையை நீக்குவதற்காகவும் மற்றும் நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகியவற்றினை நவீன மயப்படுத்தி துரித சேவைகளை வழங்குதனை நோக்கமாகவும் கொண்டு நீதித்துறை, காவல்துறை, சிறைச்சாலை ஆகிவற்றை ஒன்றிணைத்து சனாதிபதி ஆணைக்குழு வொன்றினை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.26 / '08

27.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.27 / '08

28.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.28 / '08

29.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப் பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக்கொடுப் பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருது கின்றது.

பா.29 / '08

30.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரச கூட்டுத்தானங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களையும் இயக்குனர் சபைகளையும் நியமித்தல்,— அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபை மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களிற்கும் தவிசாளர்களாகவும் இயக்குனர் சபை உறுப்பினர்க ளாகவும் தொழில்சார் கல்வித் தகைமைகள், அனுபவங்கள் உள்ளவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.30 / '08

31.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— கிராம உத்தியோகப் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயித்தல்,— நாடு முழுவதும் மீண்டும் நில அளவீடொன்றினை மேற்கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், பிரதேச செயலாளர் பிரிவுகள், மாவட்ட நிர்வாக பிரதேசங்களின் எல்லைகளை விஞ்ஞான முறையில் மீள நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.31/ '08

32.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு சேவைக்கு வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே ஆட்சேர்த்தல்,— ஸ்ரீ லங்கா, வெளிநாட்டு தூதுவராலய சேவைக்கு ஆட்சேர்க்கும் போது வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டுமே தீர்மானம் எடுப்பதுடன் அடிப்படைக் கல்வித் தகைமைகளை பரிசீலித்தலே நேர்முகப்பரீட்சையின் போது மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.32 / '08

33.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்,— குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதலும் ஒரே நீதிமன்றத்தில் இடம்பெறக்கூடிய வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.33 / '08

34.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்களை வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேருந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.34 / '08

35.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான வர்களுக்கான நிவாரணம் அளிக்குமுகமாக சனாதிபதி ஆணைக்குழு,— ஆரம்ப காலம் முதல் இன்றுவரை தாம் கொண்ட அரசியல் கொள்கை காரணமாக அரசியல் பழிவாங்கல்களுக் குள்ளானவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து நிவாரணம் வழங்குவதற்காக பூரண பலமுடைய சனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.35 / '08

36.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனா சிரியர்களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.36 / '08

37.

கௌரவ ஆர். எம். காமினி ரத்நாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன் றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா. 37 / '08

38.

கௌரவ லஷ்மன் நிபுணஆரச்சி,— ஓய்வு பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வு பணிக்கொடை பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.38/ '08

39.

கௌரவ விஜித ரணவீர,— உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பைப் பேணிப் பாதுகாத்தல்,— வரலாற்றுக்கு முந்திய யுகத்தில் மத்திய முன்னைய காலகாலத்துக்குரியதென இனங்காணப்பட்டுள்ளதும் தென் மாகாணத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளதும் தென்னிலங்கையின் ஹோர்டன் சமவெளி எனப் பிரபல்யமடைந் துள்ளதுமான உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பு, இலங்கையில் இருபத்தெட்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த திறந்த வெளிக் குடியேற்றமொன்றின் கேத்திரவடிவ ஆயுதங்களும் பாறைகளும் கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பகுதியாகவும் கடல் மற்றும் தரை உயிரியல் பல்வகைத்தன்மையில் பெருமளவு வளங்கள் நிறைந்த நிலப்பகுதியாகவும், சிறந்த கடலாமைகளின் வாழ்விட மாகவும், சுனாமிப் பேரலையினால் மக்களைப் பாதுகாத்த மதிலாகவும் அதிக பெறுமதியை கொண்டிருப்பதனால் இந்நிலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை நிறுத்தி விட்டு உடனடியாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய சுற்றாடல் தொகுதியொன்றாக பிரகடனப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.39 / ' 08

40.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.40 / ' 08

41.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.41/ '08

42.

கௌரவ விஜித ரணவீர,— 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துதல்,— இலங்கையில் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் காணி உரிமை பலவித உரிமங்களின் கீழ் வருவதுடன் மேற்படி சட்டத்தினால் வாரப் பயிர்ச்செய்கை முறை ஒழிக்கப்பட்டதனால் தாங்கள் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள காணிகளையும் இழக்க நேர்ந்துள்ளதனாலும் சட்டத்தினால் பாதுகாப்பு இல்லாததால் பலவித காணித்தகராறுகள் ஏற்படுகின்றதனாலும் வாரப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட அநீதியை ஒழிப்பதற்காக 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்தி சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

*43.

கல்வி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 212, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் நானூற்றி நாற்பத்தியொரு மில்லியன், எண்ணூராயிரம் (ரூபா 441,800,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | ரூபா |
|---|---|---|---|
| தலைப்பு 212 | — | இலங்கை பரீட்சைத் திணைக்களம் | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 441,800,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | — |
| | | மொத்தம் | 441,800,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, ஓகத்து மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 5 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 15,070,180,332.

*44.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

*45.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு

*46.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*47.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*48.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*49.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*50.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*51.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*52.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*53.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*54.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*55.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*56.

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*57.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*58.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஔ) மற்றும் (க) ஆம் பந்திகளின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2007, திசெம்பர் 17 ஆந் திகதிய 1528/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*59.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 27 ஆந் திகதிய 1555/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*60.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*61.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப் படுமாக.

*62.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*63.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*64.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*65.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*66.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*67.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*68.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,—

1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*69.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

70.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

71.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---